




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2025) சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், 2 பாக்ஸ் கிரிக்கெட் மைதானம் அடங்கிய சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கான முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.






தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2025) சென்னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், 2 பாக்ஸ் கிரிக்கெட் மைதானம் அடங்கிய சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கான முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர். அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு!

## வெளியுறவுத் துறை அமைச்சரை – மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் எம்.பி.க்கள் சந்தித்து வலியுறுத்துவர்!

# இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்கள் நிவாரணத் தொகை ரூ. 8 லட்சமாக உயர்வு! இலங்கைச் சிறையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு தின உதவித் தொகை ரூ.500 ரூபாயாக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

நாகை, மார்ச் 5-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.6 இலட்சம் என்பது ரூ.8 இலட்சம் ஆக உயர்த்தியும் - இலங்கை சிறையில் வாடும் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவி தொகை 350 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.**

மேலும் தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாடு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழு நேரில் சந்தித்து வலியுறுத்திட தமிழ்நாடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் கைப்பற்றப்பட்டுள்ள மீன்பிடி படகுகளையும் மீட்டுத்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத ஒன்றிய அரசை கண்டித்தும், இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் 28.02.2025 அன்று முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் - மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 03.03.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுவார்த்தையின்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து எடுத்துரைத்தும், தங்களது கோரிக்கைகளை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, நிறைவேற்றி தருமாறு மீனவர் சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்கள் 03.03.2025 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட போது அப்பகுதியில் உள்ள மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள்.

கடந்த 18.02.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மீனவ பிரதிநிதிகளுடனான சந்திப்பின் அடிப்படையில், அம்மா வட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன்இறங்கு தளம் மீன்பிடித்துறை முகமாக தரம் உயர்த்துதல், குந்துக்கல் மீன் இறங்கு தளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத்துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கு ரூ.360 கோடியினை ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஆணையிட்டுள்ளார்கள்.

இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அளித்த கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, இலங்கையில் நெடுங்காலமாக மீட்க இயலாத நிலையில் உள்ள மீன்பிடி விசைப் படகுகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரண தொகையினை ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவி தொகையாக தற்போது நாளொன்றுக்கு 350 ரூபாய் வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன்றுக்கு 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் நிகழ்வுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகளவில் நடைபெறுவதுடன் அவர்கள் மீது சிறை தண்டனை விதிக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களை உடனுக்குடன் விடுவிப்பது மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகளை மீட்டு தாயகம் கொண்டு வருவதை துரிதப்படுத்திடும் பொருட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் - மீனவர் நலத்துறை அமைச்சர், அலுவல்சாரா உறுப்பினர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழு, விரைவில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.



தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, கல்லத்திக்கிணறு கிராமத்தில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 45 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூட கட்டிடம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பொது விநியோக கடை கட்டிடம் ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சமுதாய நலக்கூடம் அருகில் புதிதாக கட்டப்பட இருக்கும் உணவுக்கூடம் மற்றும் சமயலறை கட்டிடப் பணிகளுக்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான, கனிமொழி கருணாநிதி எம்.பி. அடிக்கல் நாட்டினார். இதில், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, முன்னாள் யூனியன் சேர்மன் ரமேஷ், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என முதல்வர் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்துகிறார்! தமிழ்நாட்டின் நலனுக்காக

# அரசியல் வேறுபாடுகளைக் களைந்து - அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டும்!

## செய்தியாளர் சந்திப்பில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

தூத்துக்குடி, மார்ச் 5-

“தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் அனைத்து கட்சிக் கூட்டத்தை நடத்துகின்றார்! அரசியல் வேறுபாடுகளைக் களைந்து தமிழ்நாட்டின் நலனுக்காக அனைத்துக் கட்சிகளும் கலந்து கொள்ள வேண்டும்!” என கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் வேண்டுகோள் விடுத்தார்.



தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அவர்கள் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பு குறித்த விபரம் வருமாறு:-

தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டைப் பாதிக்காத வகையிலே, தென்மாநிலங்களைப் பாதிக்காத வகையிலே, முக்கியமாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களைப் பாதிக்காத வகையிலே செய்யப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுப்பி இருக்கின்றார்கள். அதற்காக அனைத்து கட்சி கூட்டத்தையும் அழைத்து இருக்கிறார்கள். வராத சில கட்சிகளிடம், கௌரவம் பார்க்காதீர்கள், இது தமிழ்நாட்டுடைய நலனை மையமாக கொண்ட ஒரு கூட்டம். அதனால் நம் உரிமைகளுக்காக இணைந்து நாம் குரல் கொடுக்க வேண்டும். அதனால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக தமிழ்நாட்டு நலனைப் பலி கொடுக்காதீர்கள் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டைப் பாதிக்கக்கூடாது என்ற முதலமைச்சருடைய கருத்துக்கு சமீபத்தில் தமிழ்நாடு வந்த உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், PRO RATA அடிப்படையில் மறுசீரமைப்பு நடக்கும், தமிழ்நாட்டிற்கு தொகுதிகள் குறையாது எனச் சொல்லி இருந்தார்.

இது தெளிவைத் தருவதற்குப் பதிலாகப் பல குழப்பங்களை உருவாக்கி இருக்கிறது. ஏனென்றால், இதுவரை எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிதான் ஒவ்வொரு முறையும் தொகுதி மறுசீரமைப்பு நடந்துள்ளது. அதாவது மக்கள்தொகை அடிப்படையில்தான் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உணர்வு நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட பிறகு, 1971 ஆம் ஆண்டுக்கு பிறகு, மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பும் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

சில மாநிலங்கள் இந்த மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதை முக்கியமாக எடுத்துக்கொண்டு, அதில் வெற்றி பெற்று இருக்கிறார்கள். பல மாநிலங்கள் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் சீரிய முறையில் கவனம் செலுத்தவில்லை; அந்த மாநிலங்களில் மக்கள் தொகை அதிகரித்து இருக்கிறது.

அப்படிப்பட்ட சூழலில் மக்கள் தொகையை குறைத்து இருக்கக்கூடிய மாநிலங்கள் பாதிக்கப்பட கூடாது. இந்த இரண்டு விதமான மாநிலங்களுக்கு இடையே சீரான நிலை வரும் வரை, தொகுதி மறுசீரமைப்பு நிறுத்தி வைக்கப்பட்ட வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகு அந்த இட ஒதுக்கீடு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அதுபோல், நாடாளுமன்றதிலே பல கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர்களும் பல முறை மறுசீரமைப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தொகுதி மறுசீரமைப்பு தமிழ்நாட்டை பாதிக்கக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துகிறார்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், தமிழ்நாட்டிற்கு எண்ணிக்கை குறைக்கப்படாது, நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 என்கிற அதே அளவில் இருந்தாலும், மற்ற மாநிலங்களில், உ.பி. முதலான மாநிலங்களில் மக்கள் தொகை அடிப்படையில் அதிகமான எண்ணிக்கை தரப்பட்டால், அதுவும் நமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

தமிழ்நாட்டின் எம்பிக்களுடைய சதவீதம் 543ல் 7.18 சதவிகிதம் இருக்கிறோம். ஆனால் இப்படி மாறும்போது 5 5.7 சதவிகிதமாக மாற வாய்ப்புள்ளது. அதில் நாம் பெரிய அளவில் பாதிக்கப்படுவோம். தென் மாநிலங்கள் அதிக அளவில் பாதிக்கப்படும்.

இதைத்தான் நம் முதல்வர் மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். இதற்கு ஒரு தெளிவானபதிலைஉள்துறைஅமைச்சரோ ஒன்றிய அரசோ கூறவேண்டும். இது நியாயமான அச்சம். இதில் தெளிவு பெற்றால் தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும்.

தமிழ்நாடு பாதிக்கப்படாமல், தென்மாநிலங்கள் பாதிக்கபடாமல் தொகுதி மறுசீரமைப்பு பற்றி சரிசெய்வதற்கு பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகிறது. அதற்காகதான் முதலமைச்சர் அனைத்து கட்சி கூட்டத்தை அழைத்து இருக்கிறார்கள். அங்கே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படும். எது சரியாக எல்லாருக்கும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாக இருக்கிறதோ, அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். முதலில் விவாதம் நடக்க வேண்டும். அந்த விவாத்திற்கே சிலர் வர தயங்குகிறார்கள். பிஜேபியும் அங்கு வந்து நியாயமா வந்து அவர்களின் கருத்துக்களை சொல்லலாம்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் ஒருமித்த குரலை எழுப்பலாம். எல்லாருடைய கருத்தையும் கேட்டு, அதற்கான சரியான தீர்வைக் காண வேண்டும் என்பதே முதலமைச்சருடைய எண்ணம்; திமுகவினுடைய நிலைப்பாடு. தமிழ்நாடு, தென்மாநிலங்கள், மக்கள் தொகையைக் குறைத்து உள்ள தொகுதி மாநிலங்கள் மறுசீரமைப்பால் பாதிக்கப்படக் கூடாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் மூலம் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சின்ன இலந்தைகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை காணொலி வாயிலாக திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அரங்கை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.